Enrich, XIV (II): 1 - 6, Jan. – June, 2023

# பனி மனிதன் புதினத்தில் ஆன்மீக சிந்தனைகள்

முனைவர் உ. விஜி, உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை
ஏ.பி.சி. மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி

**முன்னுரை**

இலக்கிய நிகழ்ச்சிகள் உலகிலும் தம் வாழ்விலும் நிகழ்வதற்கு உரியவை எனக் கலைஞன் கருதும்போதே அவனுக்கு இலக்கியத்தில் நம்பிக்கை ஏற்படுகிறது. மேன்மேலும் கலைஞர்களால் பேரளவில் விரும்பப்படும் பொழுதே இலக்கியம் உயிரோட்டம் பெற்று நெடுங்காலம் நிலைத்து நிற்கும் ஆற்றலைப் பெறுகிறது.

உலக சமயங்கள் அனைத்துமே மக்களிடம் அறநெறிகளைப் பரப்பும் பண்பு கொண்டவை. சமண, பௌத்த சமயங்கள் இரண்டும் சிறப்பாக கொல்லாமை, ஊன் உண்ணாமை போன்ற அறநெறி சார்ந்த ஒழுக்கங்களை மக்களிடம் பரப்பும் நோக்கம் கொண்டவை. பனி மனிதன் புதினத்தில் ஆசிரியர் இளம் தலைமுறையினருக்கு அன்பு, கருணை, பிறர் பொருளுக்கு ஆசை படாதிருத்தல், இயற்கையைப் பாதுகாத்தல், அறிவியலையும் ஆன்மீகத்தையும் இணைத்துப் பார்த்தல் போன்ற கருத்துக்களை உருவாக்க முயல்கிறார். பரிணாம வளர்ச்சி, அறிவியல் முன்னேற்றம் இவற்றால் மனிதன் முழுமை அடைந்து விட்டானா? என்ற கேள்விக்கு ஆசிரியர் விடை காண முயல்கிறார். பனிமனிதன் புதினத்துள் காணப்படும் அறிவியல், ஆன்மீகம், அறநெறி கருத்துக்களை ஆய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

**குரங்கிற்கும் மனிதனுக்கும் இடைப்பட்ட உயிரினம்**

மனிதனுக்கும் குரங்கிற்கும் நடுவே உள்ள குரங்கு மனிதனை இமய மலைப்பகுதியில் பார்த்ததாகவும் அவன் மனிதனைவிட மூன்று மடங்கு உயரம் உடையவன் என்றும் காலடி தடத்தைப் பலமுறை பார்த்ததாகவும் கூறுகின்றனர். அச்செய்திகளின் உண்மைத் தன்மையை ஆராயும் பொறுப்பு இராணுவ அதிகாரியான பாண்டியனுக்கு அளிக்கப்படுகிறது. இமயமலைப் பகுதியில் உள்ள மனிதர்களைப் பற்றி ஆராய்ச்சி செய்பவர் டாக்டர் திவாகர். அவரைச் சந்தித்து விவரங்களைச் சேகரிக்கச் செல்கிறான் பாண்டியன். வழியில் மலைவாழ் மக்கள் ஒரு சிறுவனை மலை தெய்வத்துக்குப் பலியாக வைத்துச் செல்கின்றனர். அந்த சிறுவனை பாண்டியன் காப்பாற்றி டாக்டரிடம் கொண்டு செல்கிறான். டாக்டர் அச்சிறுவனின் காய்ச்சலை குணப்படுத்துகிறார். ஆடு மேய்க்க சென்ற போது சிறுவன் கிம்மிற்கு காய்ச்சல் ஏற்பட்டதால் தனித்து விடப்படுகிறான். அச்சிறுவனை பனிமனிதன் தூக்கிச் சென்றதாகவும் பனிமனிதனைத் தான் பார்த்ததாகவும் சிறுவன் கூறுகிறான். பனிமனிதன் பற்றிய ஆராய்ச்சியை மேற்கொள்ள பாண்டியன், டாக்டர் மற்றும் சிறுவன் கிம் மூவரும் இமயமலையை நோக்கிச் செல்கின்றனர்.

**இயற்கையே இறைவன்**

பனிமலையில் பனிச்சமவெளி ஒரு பிரம்மாண்ட கண்ணாடி போன்று சூரிய ஒளியைப் பிரதிபலித்தது. இரவு எட்டு மணி ஆகியும் ஒளி குறையவில்லை. கிம் பேசாமல் அமைதியாக இருந்தான். ஏன் பேசாமல் வருகிறாய்? பனிச்சமவெளியைப் பார்த்து பயமா? என்று இராணுவ அதிகாரி பாண்டியன் கேட்டான். அதற்கு கிம் பயமா? எதற்கு? பனிமலை புத்தரின் மனம். இங்கு வருவது பெரிய பாக்கியம் என்று அப்பா சொல்லுவார் என்கிறான். இங்கு எல்லாமே தூய்மையாக உள்ளன. இங்கு எந்த ஒலியும் இல்லை. தியானம் செய்யும் புத்தரின் மனம் போல இந்த இடம் அமைதியாக இருக்கிறது என்றான் கிம். தியானம் செய்வதால் அமைதி பெறலாம் என்ற ஆன்மீகக் கருத்தும் சிறுவர்களின் உள்ளங்களில்

ஆன்மீக சிந்தனையைப் பெற்றோர்கள் விதைக்க வேண்டும் என்ற கருத்தும் கவனிக்கப்படத்தக்கது.

மெதுவாக சூரிய ஒளி சிவக்க ஆரம்பித்தது. தூரத்தில் தெரிந்த மலைச்சிகரங்கள் சிவப்பு நிறம் பெற்றன. எல்லாப்பக்கமும் செந்நிறம் மட்டுமே தெரிந்தது. மேலே வானம் சிவப்பு நிறம். கீழே பனி வெளியும் சிவப்பு நிறம். தீயாலான ஒரு பெரிய வெட்ட வெளியில் நிற்பது போன்றிருந்தது. இதைப்பார்த்து கிம், புத்தர் புன்னகை புரிகிறார் என்றான். செந்நிறம் அடர்ந்தது. பிறகு மெல்ல இருண்டது. புத்தர் தூங்குகிறார் என்றான் சிறுவன் கிம். இமயமலைச்சாரலில் பனி புயல் வீசியது. இருட்டில் மின்னல்கள் அதிர்ந்தன. மண்ணில் பனிப்பாளங்கள் விழுந்தன. ஒவ்வொரு பனிகட்டியும் அவர்களை விட பெரியதாக இருந்தது. மின்னல் அடித்த போது வெட்டவெளியில் நின்றிருந்தால் அவர்கள் இந்நேரம் கூழ் ஆகியிருப்பார்கள். இந்நிலையில் எல்லா இடங்களிலும் இறைவனைக் காணும் கண்களைக் கிம் பெற்றிருந்தான் வானம் சிவந்த பொழுது புத்தர் புன்னகை புரிகிறார் என்றும் வானம் இருண்ட பொழுது புத்தர் தூங்குகிறார் என்றும் மின்னல் மின்னி பனி மழை பொழிந்து உயிர் போகும் நிலை வந்த பொழுது புத்தர் விளையாடுகிறார் என்றும் கிம் கூறுகிறான். எல்லாம் அவன் செயல் என்ற ஆன்மீக உச்ச நிலை புதினத்தில் வெளிப்படுகிறது.

**இயற்கை சிற்பிகள்**

பனிமனிதனை தேடிச் செல்லும் வழியில் டாக்டர், பாண்டியன், கிம் மூவரும் பனிபாளம் உடைந்து ஒரு குகைக்குள் விழுந்து விடுகின்றனர். அந்த குகை இருட்டாக உள்ளது. அதிலிருந்து வெளிவர வழி தேடுகின்றனர். கையில் உள்ள விளக்கை எடுத்து ஒளியேற்றியவுடன் அந்த குகை அற்புதமாக காட்சி அளிக்கிறது. கூரையில் இருந்து வெண்ணிறமான பனி தொங்கியது. கண்ணாடியாலான அலங்காரம் போல் அது காணப்பட்டது. இயற்கை சிற்பிகள் வடித்த அற்புத அலங்காரம் அது. அந்த பனி விழுதுகளில் இளநீலநிறம், மஞ்சள் நிறம், சிவப்பு நிற விழுதுகள் இருந்தன. அந்தக் குகைக்குள் அமைதி நிரம்பியிருந்தது. ஆழமான ஞானம் உடையவர்களின் உள்ளமும் அது போன்றதுதான். அங்கு அற்புதங்கள் நிரம்பியிருக்கும். அந்த அற்புதங்கள் மௌனத்தில் மறைந்திருக்கும். அவற்றைத்தேடி செல்பவர்களுக்கு மட்டுமே அது கிடைக்கும். ஆர்வம், பணிவு என்ற கைவிளக்கால் மட்டுமே அந்த அற்புதமான பேரழகை காண முடியும் என்கிறார் ஆசிரியர். இறைவனை அடையும் வழியை இதைவிட எளிமையாக யாராலும் விளக்க இயலாது.

**ஒளியும் வெப்பமும்**

தீ என்று எதுவும் இல்லை. ஒவ்வொரு பொருளுக்கு உள்ளேயும் ஒளியும் வெப்பமும் உள்ளன. அவை வெளிவரும் போதுதான் தீ உருவாகிறது. விறகில் இருந்து தீ வெளிப்படுகிறது. எண்ணெய்யிலிருந்து தீ வெளிவருகிறது. கற்களை உரசினால் தீ வெளிவருகிறது. காய்ச்சிய உலோகங்கள் தீயாக மாறிவிடுகின்றன. சூரியனில் தீ உள்ளது. மண்ணுக்கடியில் கூட தீ கொதித்தபடி உள்ளது. எங்கும் தீ தான். எதிலும் தீ தான். எனவே தான் நம் மூதாதையர்கள் தீயை வழிபட்டனர். தீயில் எல்லாவித குப்பைகளும் எரிந்து சாம்பலாகி விடுகின்றன. அது போல நம் மனதில் உள்ள தீய எண்ணங்கள் அழிய வேண்டும்.

**புத்தரின் கருணை**

இமயமலைப்பகுதியில் வானத்தில் முழுநிலா எழுந்தது பார்ப்பதற்கு மிகப் பெரியதாக இருந்தது. தரையில் இருந்து பார்ப்பதைப்போல் இரண்டு மடங்கு பெரிய நிலவு. பனிப்பாளம்

ஒரு பெரிய கண்ணாடி போல வானத்தைப் பிரதிபலித்தது. இரண்டு நிலவுகள் அவை அசையாமல் நின்றன. சிறுவன் கிம் பத்மாசனமிட்டு அமர்ந்தான். புத்தம் சரணம் கச்சாமி! சங்கம் சரணம் கச்சாமி! தர்மம் சரணம் கச்சாமி என்றான். பாண்டியனும் அவனுடன் இணைந்து கொண்டான். புத்தரின் நாமத்தைச் சொல்லச் சொல்ல, மனம் கனிந்தது. உலகில் உள்ள அத்தனை மனிதர்கள் மீதும் அன்பு தோன்றியது.

இந்த வானம் எவ்வளவு அழகாக இருக்கிறது. இந்த பூமியும் எத்தனை அழகாக இருக்கிறது. எவ்வளவு மகத்தான வாழ்க்கை மனிதனுக்கு அருளப்பட்டிருக்கிறது. ஆனால் மனிதன் சுயநலத்தால் பிறரைத் துன்புறுத்துகிறான். தானும் துன்புறுகிறான். புத்தர் பெருமானே நீங்கள் கருணையை மனிதர்களுக்குக் கற்பித்தீர்கள். அந்த கருணை என் மனதிலும் நிறைய வேண்டும். நான் யாரையும் வெறுக்கக் கூடாது என்று பாண்டியன் மனதுக்குள் நினைத்தான். இக்கருத்து மக்கள் அனைவரும் அறத்தோடும் அன்போடும் வாழ வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துகிறது.

**கண்ணோட்டம் என்னும் கழிபெருங் காரிகை**
**உண்மையாள் உண்டிவ் வுலகு (குறள் 571)**

கண்ணோட்டம் என்று சொல்லப்படும் கருணையால் தான் இந்த உலகம் இன்னும் அழியாமல் இருக்கிறது. அந்தக் கருணையை பாண்டியன் புத்தரிடம் கேட்பதன் மூலம் உலக மக்கள் அனைவரிடமும் கருணை நிறைய வேண்டும் என்று ஆசிரியர் விளக்குகிறார்.

**யோக சுவாசம்**

கிம் தரையில் காலை பத்மாசனமிட்டு அமர்ந்தான். தோள்களை விரித்து, மார்பை நிமிர்த்தி, அடிவயிற்றை இறுக்கினான். மிக ஆழமாக மூச்சை இழுத்து மிக வேகமாக விட்டான். சீராக அப்படி பலமுறை செய்தான். இதற்கு யோக சுவாசம் என்றான். இந்த யோக சுவாசத்தை தன் தந்தையிடம் இருந்து கற்றுக் கொண்டதாகக் கூறினான். பனிமலையில் வாழும் பழங்குடி மக்கள் அத்தனை சிறப்பாக யோகப்பயிற்சி பெற்றிருந்ததாக ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

**தியானம்**

கிம் காலையில் முதலில் எழுந்தான். சிறு வயதில் புத்த மடாலயத்தில் கல்வி கற்றவன். அங்கு எப்போதும் அதிகாலையில் எழுந்தாக வேண்டும். எத்தனை கடும் குளிர் இருந்தாலும் எழுந்தாக வேண்டும். அவ்வாறு பழகியதால் காலையில் அவன் நினைத்தால் கூட வெகு நேரம் தூங்க முடியாது. கிம் அரைக்குவளை நீரை சூடுபடுத்தி உடலை தூய்மை செய்தான். தரையில் அமர்ந்து தியானம் செய்தான். தியானம் என்பது கண்களை மூடிக்கொண்டு நம் மனதில் ஓடும் எண்ணங்களை கவனிப்பதாகும். அப்படிக் கவனித்தால் மெதுவாக நமது எண்ணங்கள் ஒழுங்காக ஆகிவிடும். நம் மனம் அமைதி அடைந்துவிடும். தியானம் என்பதற்கான எளிமையான விளக்கத்தை ஆசிரியர் அளிக்கிறார்.

**யோகா**

யோகா என்பது இந்திய கலாச்சாரம் மற்றும் பாரம்பரியம் உலகிற்கு கொடுத்த நன்கொடை எனலாம். உடல், மனம், அறிவு, உணர்வு மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்கு உதவிடும் கலை யோகக்கலை ஆகும். முறையாக யோகா செய்வதனால் உடல் நலத்தையும், மனநலத்தையும் பாதுகாக்கலாம். யோகக்கலையைப் பயின்றவர்கள் நீண்ட நாள் வாழலாம். பனிமனிதன் புதினத்தில் திபெத்தில் உள்ள மக்கள் நூறு வயது வரை வாழ்வது மிகவும் சாதாரணம் என்று ஆசிரியர் கூறுகிறார். திபெத்தில் உள்ள பௌத்த துறவிகள் பல தியானப் பயிற்சிகளை செய்வார்கள். அதனால் இரு நூறு வயது வரை கூட நோய் நொடியின்றி சுகமாக வாழ்வார்கள்

என்று கூறுவதன் மூலம் ஆன்மீக வாழ்க்கைக்கும் உலகியல் வாழ்க்கைக்கும் யோகா அவசியம் என்பதை அறுதியிட்டு கூறுகிறார். திபெத்தில் இருக்கும் புத்த விகாரத்திற்கு சிவ ஓ ரேபா என்று பெயர். அதன் தலைமை லாமா (குரு) மிலா பொடோர்ஜெ (சிரிக்கும் வைரம்). அவர் வயது நூற்றி நாற்பது. அவர் இன்னும் பத்து வருடங்களில் தான் உயிர் துறக்க போவதாகக் கூறியதாக பௌத்த பிட்சுக்கள் கூறுகின்றனர். மரணம் கூட அவர் விருப்பப்படிதான் வரும். மகாபாரதத்தில் சாந்தனு மன்னன் பீமரின் தந்தை பீமர் தனக்காக உலக வாழ்க்கையைத் துறந்ததை அறிந்து வியந்து குற்றங்களால் அணுக முடியாதவனே நீ விரும்புகிற வரையில் வாழ்வாய்! உன் அனுமதி பெற்ற பிறகு தான் எமன் உன்னை நெருங்க முடியும் என்று வரமளித்தார். ஒழுக்கமான வாழ்க்கை மனிதனுக்கு மன அமைதியை மட்டுமின்றி நீண்ட ஆயுளையும் அளிக்க வல்லமை பெற்றது.

**பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்**
**தேரினும் அஃதே துணை. (குறள் 132)**

வருந்தியேனும் ஒழுக்கத்தை போற்றி காக்க வேண்டும். ஆராய்ந்து கைக்கொண்டு தெளிந்தாலும் ஒழுக்கமே உயிருக்குத் துணையாகும் என்ற வள்ளுவரின் கருத்தும் வியாசரின் கருத்தும் இங்கே வெளிப்படுகிறது.

**உலக ஆசை**

பனிமனிதனைத் தேடிச்செல்லும் பாதையில் நீலநிற வைரமலையை டாக்டர், பாண்டியன், கிம் மூவரும் பார்க்கின்றனர். ஒரு மனிதனின் உயரத்திற்கு வைரமலை நிற்கிறது. அதைப்பார்த்து டாக்டர் மற்றும் பாண்டியன் வைரத்தை அடைய ஆசைப்படுகிறார்கள். ஆனால் சிறுவன் கிம் வைரத்தின் அருகில் வரவில்லை. புத்தர் நம்மை சோதிக்கிறார். இந்த வைரத்தின் அருகில் வந்தால் புத்தரின் கருணையை இழந்து விடுவேன் என்கின்றான். செல்வத்தின் மீதான ஆசை மனிதனின் மனத்தை மயக்கி நிலைதடுமாறச் செய்கிறது. பனிமனிதனைத் தேடி வந்தவர்கள் தாங்கள் வந்த நோக்கத்தை மறந்து வைரத்தின் மீது ஆசை வைக்கிறார்கள். இதன் மூலம் உலக உயிர்களின் நோக்கம் இறைவனை அடைவது. அதை மறந்து இந்த அற்பமான உலக சுகங்களில் ஈடுபட்டு அதுவே உண்மை என்று வாழும் வாழ்க்கையை விட வேண்டும். உலக ஆசைகளைத் துறந்தால் தான் இறைவனை அடைய முடியும் என்ற கருத்தை ஆசிரியர் நுட்பமாகச் சொல்கிறார். ஆசைகளைத் துறந்தவனாக சிறுவன் கிம் சித்தரிக்கப்படுகிறான். வைரத்தின் அருகே இருக்கும் வரை என்னால் சிந்திக்க கூட முடியவில்லை வைரத்தை விட்டு விலகியதும் அந்த ஆசை மறைந்து விட்டது என்ற பாண்டியனின் கூற்று உலக பொருட்களின் அருகில் இருந்தால் அவற்றின் மீது பற்று ஏற்படும் எனவே அவற்றை விட்டு விலகி வாழ்ந்தால் இறைவனை அடையலாம் என்ற அடிப்படை ஆன்மீகக் கருத்தை ஆசிரியர் மிக எளிமையாக எடுத்துக்கூறுகிறார்.

**யதி பனிமனிதன்**

குரங்குக்கும் மனிதனுக்கும் இடையே உள்ள உயிரினம் பனிமனிதன் என்று ஆசிரியர் கூறுகிறார். பனிமனிதனைப் பற்றி பௌத்த மத ரகசிய நூல்களில் நிறைய குறிப்புகள் உள்ளன. பனிமனிதனுக்கு யதி என்று பெயர். யதி என்றால் சமஸ்கிருதத்தில் அனைத்து ஆசைகளையும் துறந்தவன். கோபமோ வெறுப்போ இல்லாதவன். தூய மனம் உடையவன். மனிதர்கள் மீதும் அனைத்து உயிரினங்கள் மீதும் பேரன்பு கொண்டவன். இமயமலையின் உச்சியில்தான் அவர்கள் வாழும் இடம் உள்ளது. அங்கு அழுக்கு என்பதே இல்லை. தீமை என்பதே இல்லை. அழகில்லாத எதுவுமே இல்லை. ஒரு காலத்தில் இந்த பூமியும்

அவ்வாறுதான் இருந்தது என்று ஆசிரியர் கூறுவதன் மூலம் ஒரு அமைதியான ஆசையற்ற தீமை இல்லாத மகிழ்ச்சியான உலகம் உருவாக வேண்டும் என்ற ஆசிரியரின் எண்ணம் வெளிப்படுகிறது. அந்த ஆனந்தமான உலகிற்கு அடிப்படை ஆன்மீகம்.

**உயிர்களிடத்தில் அன்பு வேண்டும் தெய்வம்**
**உண்மை என்று தானறிதல் வேண்டும்**

என்ற பாரதியின் வரிகள் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. எவன் ஒருவன் எல்லா உயிர்களிடத்தும் அன்பு உடையவனாக இருக்கிறானோ அவனே தெய்வம்.
இதைத்தான் வள்ளுவரும்

**அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்**
**என்பும் உரியர் பிறர்க்கு. (குறள் 72)**

என்கிறார். உயிர்கள் அனைத்திடமும் அன்புடையவர்கள் சுயநலமில்லாதவர்களாக பிறர் நலம் விரும்புபவர்களாக வாழ்வார்கள். அப்படிப் பட்ட உயர்ந்த மனிதனாக பனிமனிதன் படைக்கப்பட்டுள்ளான்.

**யதிகள் விதை நெல் போன்றவர்கள்**

திபெத்தில் அடிக்கடி பூகம்பமும் வெள்ளமும் வரும். விவசாயம் முழுவதும் அழிந்து போகும். எனவே ஒவ்வொரு முறையும் அறுவடை முடிந்ததும் சிறிது தானியத்தை எடுத்து நன்றாக உலர வைத்து ஒரு தாமிர பாத்திரத்தில் போட்டு, அதை மூடி விளிம்புகளை ஈயத்தால் உருக்கி அடைத்து உயரமான மலைகளின் உச்சியில் போய் வைப்பர். பெரிய பூகம்பமோ வெள்ளமோ ஏற்பட்டு விவசாயம் முழுவதும் அழிந்து விட்டால் மீண்டும் விவசாயத்தைத் தொடங்க அந்த மலைமேல் வைத்திருக்கும் பாத்திரத்தில் உள்ள விதை நெல் பயன்படும். அது போல உலகில் தீமை மிகுதியாகி என்றாவது ஒரு நாள் உலகம் அழிந்து ஒரு மனிதர் கூட இல்லாமல் ஆகிவிட்டால் மீண்டும் நல்ல மனிதர்களை உருவாக்க புத்தர் யதிகளை விதை நெல்லாக வைத்திருக்கிறார் என்று புத்த மத லாமாக்கள் நம்புகிறார்கள்.

**துக்கமும் கவலையும்**

உயிரினங்களில் மனிதனுக்கு மட்டும்தான் துக்கமும் கவலைகளும் இருக்கின்றன. இதற்கு காரணம் ‘திருஷ்ணை’ என்று ஆசிரியர் கூறுகிறார். இந்த திருஷ்ணையில் இருந்து பேராசையும் பொறாமையும் பிறக்கின்றன. ஏமாற்றமும் கோபமும் கூட அதிலிருந்துதான் பிறக்கிறது. முன்னேறுவதற்கான துடிப்பு அதுதான் ‘திருஷ்ணை.’ அதை மனிதர்களின் மனங்களில் பரப்புகிற ஒரு தீய சக்தி இருப்பதாக பௌத்தர்கள் நினைக்கிறார்கள். அவன்தான் மாரன் என்கிறார்கள். மனிதர்களின் கோபம், பேராசை, பொறாமை, துக்கம் எல்லாமே மாரனால் உருவாகின்றன என்கிறார்கள். அந்த சக்தி நம் அனைவர் மனத்திலும் ரகசியமாக இருக்கிறது. எனவேதான் நாம் எது கிடைத்தாலும் திருப்தி அடைவதில்லை. இந்த ஆசையால்தான் மனிதன் மிருகங்களைப் பிடித்து அடிமையாக்கினான். பிற மனிதர்களையும் அடிமையாக்கினான். அவர்களைக் கொடுமைப்படுத்தி வேலை வாங்கி, தனக்கு செல்வம் சேர்த்துக்கொண்டான். அணுகுண்டு வீசி, கோடிக்கணக்கான மக்களை கொன்று குவிக்கிறான். எந்த குரங்காவது இவ்வாறு ஆயிரக்கணக்கான குரங்குகளைக் கொன்று குவிக்குமா? காகங்கள் கூட பகிர்ந்து உண்ணுகின்றன. ஆனால் சக மனிதன் பட்டினியால் சாகும் போது, மற்றவர்கள் தங்களுக்கு அரண்மனை கட்டிக்கொண்டு சுகமாக வாழ்கிறார்கள்.. இதுவா நாகரிகம்? இதுவா பண்பாடு? என்று கேட்பதன் மூலம் சமதர்ம சமுதாயம் மலர வேண்டும். அதற்கு ஆன்மீகம் அடிப்படையாக அமைய வேண்டும் என்கிறார்.

இங்கே பாரதியின் தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம் என்ற வரிகள் எல்லா மக்களும் எல்லா வளமும் நலமும் பெற்று வாழ வேண்டும் என்றத் துடிப்பு பனிமனிதன் புதினத்தில் வெளிப்படுகிறது.

**முடிவுரை**

பனிமனிதன் புதினத்தில் ஆசிரியர் மனிதனுக்கும் குரங்கிற்கும் இடையே ஓர் உயிரினம் வாழ்ந்திருக்க வேண்டும் என்றும் அந்த உயிர் பனிமனிதன் என்றும் கூறுகிறார். பனிமனிதன் தீமையை அறியாதவன் என்று கூறுவதன் வாயிலாக மனித இனம் தீமையற்ற நல்வாழ்க்கை வாழ வேண்டும் என்ற ஆசிரியரின் விருப்பம் வெளிப்படுகிறது. ஆன்மீகத்தால் மட்டுமே உலகை தீமைகளிலிருந்து வெளிக்கொணர முடியும். இயற்கையின் அழகை இரசிக்கும் மனிதன் இயற்கையின் சீற்றங்களையும் இரசிக்க கற்றுக்கொள்ள வேண்டும். பனிமனிதனைத் தேடிச் செல்லும் பயணத்தில் ஆசிரியர் நம்மையும் பயணம் செய்ய வைக்கிறார். இயற்கையின் ஒவ்வொரு செயலிலும் புத்தரைக் காணும் கிம், பனி புயல் கண்டு மிரண்டு பின் அது காளியின் அற்புத விளையாட்டு என்று பாடி மகிழும் பாண்டியன் இவர்களின் மூலமாக இறை ஞானத்தை ஆசிரியர் சிறுவர்களுக்கு மட்டுமல்ல பெரியவர்களுக்கும் அளிக்கிறார். ஆசையற்றவர்களிடமே செல்வம் இருக்க வேண்டும். ஏன் என்றால் அச்செல்வம் தக்கார்க்கு தக்க நேரத்தில் பயன்படும்.

**பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்**
**நயனுடை யான்கண் படின். (குறள் 216)**

ஒப்புரவாகிய நற்பண்புகளை உடையவனிடம் செல்வம் சேர்ந்தால் அ∴து ஊரின் நடுவே உள்ள பயன் மிகுந்த மரம் பழங்கள் பழுத்தாற் போன்றது. எல்லார்க்கும் பொதுவாகும் என்ற வள்ளுவர் கருத்து மிக ஆழமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. ஒருவன் மட்டுமே செல்வத்தை துய்க்க கூடாது. உலகில் வாழும் எல்லா மக்களும் எல்லாம் பெறவேண்டும் என்ற தத்துவம் வெளிப்படுகிறது. இறை நம்பிக்கை மட்டுமே மனிதர்களையும் இயற்கையையும் பாதுகாக்கும். சிறுவர்களிடம் இறை நம்பிக்கை, இயற்கை ஈ:டுபாடு, யோகம், தியானம், மதசகிப்புத்தன்மை, உயிர்களிடத்து அன்பு, செல்வத்தின் மீது பற்றற்ற தன்மை போன்ற நல்ல பண்புகளை உருவாக்கும் புதினமாக விளங்குகிறது. இந்து மதத்தின் மீதும் புத்த மதத்தின் மீதும் நம்பிக்கை கொண்டவர் ஆசிரியர் என்பது புலனாகிறது. மதம் என்பதைக் கடந்து மனிதத்தின் மீதும் இயற்கையின் மீதும் எல்லா உயிர்களிடத்தும் அருள் உடையவர் என்பதும் இப்புதினத்தின் வழி வெளிப்படுகிறது. அவர் விரும்பும் உலகம் நல்லவர்கள் யாவரும் விரும்பும் உலகம் ஆகும். சிறுவர்களுக்கு மதம் சார்ந்த கல்வி அவசியம். ஆன்மீகம் என்பது இளமையில் மனத்தில் விதைக்கப்பட வேண்டும். யோகா உடலினை உறுதி செய்வதோடு நல்ல ஒழுக்கத்தையும் தரும் என்ற ஆசிரியரின் கருத்து ஏற்புடையதாகும்.

**பார்வை நூல்கள்**

1. பனிமனிதன் ஆசிரியர் ஜெயமோகன்
2. திருக்குறள்
3. பாரதியார் கவிதைகள்
4. மகாபாரதம்
5. https://tamilkatturai.com
6. https://thamizhpathivugal.com
7. http://tamilsurangam.com